https://tamileelamarchive.com/

614


# விடியலின் சுவடுகள்



வெளியீடு:

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை கலாச்சாரப் பிரிவு - பிரஞ்சுக்கிளை

https://tamileelamarchive.com/



# விடியலின் சுவடுகள்

கவிதைத் தொகுப்பு

மனித நேயமும் - சமூக நோக்கும்
கொண்ட பேனாக்கள் பிரசவித்த - பூக்கள் இவை.
இப் பூக்களைத் தொடுத்து நாம்
எம் மண்ணின் விடிவுக்காக
மரணித்த இளைய தோழர்களதும் - தோழிகளினதும்
பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

எம் தேச விடுதலையின் எதிர்காலம்
எங்கள் தியாக தீபங்களின்
வரலாற்றைத் தரிசிக்கும் போது,
அத் தீபங்களின் பாதங்களில் கிடக்கும்
இப் பூக்களை சற்று முகரட்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின்
கலை கலாச்சாரப் பிரிவு - பிரஞ்சுக்கிளை
பாரிஸ்.

https://tamileelamarchive.com/

27. 11. 1991

வெளியீடு:

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை கலாச்சாரப் பிரிவு - பிரஞ்சு

# வீர வணக்கம்

வாழ்க்கையை -
விடுதலைப் போரினாலும்
மரணத்தை -
அஞ்சாத தியாகத்தாலும்
கடைசி வரைக்கும்
கனப்படுத்தி,
பூமி கனக்கப்
புதைந்த புலிகளே!

காலத்தின் செவிகளில்
உமது கர்ச்சனை...
யுகங்களின் நெற்றியில்
உமது திருப் பெயர்....

நாளைய மானுடப்
பிஞ்சு முகங்கள்
முகர்ந்து பார்க்கும்
ஒவ்வொரு பூவிலும்
உங்கள் உயிரின்
வாசம் கமழும்....

https://tamileelamarchive.com/

நாளைய விடியலை
ஈழத்தில் எழுத
நீளும் கதிர்களில்
நிச்சயம் உமது
உயிரின் துடும்
ஒன்றித்திருக்கும்.
துரோகத் தூசுப் படலத்தை
உயிரின் சுவாலையால்
பொசுக்கிய புலிகளே!
காலியான சயனைட் குப்பிகளும்
கழன்று கிடக்கும் தோள் துப்பாக்கிகளும்
இன்னும் உலராத இளைய ரத்தமும்...
அனைத்திலும் மேலாய்
உம்
வாழ்வும் மரணமும்,
விடுதலை வரித்த
அடையாளங்களாய்
வரலாற்று வரிகளில்
கனத்துக் கிடக்கும்!
ரத்த சாட்சிகளே!
வீரவணக்கம்.

கவிஞர்
- இன்குலாப் -





# நாம் அணிவகுத்துள்ளோம் !

நாம் அணிவகுத்துள்ளோம்....
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்
நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த நமது நாட்டை மீட்க.

எதிரி எமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்துவிட்டான்!
அதைக்கண்டு நாம் அஞ்சவில்லை
புயலெனச்சீறி
இழந்த நாட்டை மீட்க
நாம் அணிவகுத்துள்ளோம்....
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்
எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்.
ஆனால்.... ....
அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவென்னும்
கவசம் எம்மிடம் உண்டு.
எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது
எமது
ஆத்ம பலமோ அதைவிட வலிமைவாய்ந்தது
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்.. ... ...
ஆனால்
எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கிவிடும்!

https://tamileelamarchive.com/



நாம் அணிவகுத்துள்ளோம்......
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்
எமது அணிவகுப்பு
எமது தமிழ்ஈழ மக்களிடையே
அணிவகுத்துச் செல்கிறது!
நாம் செல்லும் இடமெல்லாம்.. ....
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்
மக்களிடம் உள்ள
பிரதேசம் சாதி
மதமெனும் பேய்களும்
அலறி ஓடுகின்றன... ....
எமது படையணி விரைகிறது... ...
எமது தேசத்தை மீட்க.

நாம் செல்லும் இடமெல்லாம்
காடுகள் கழனிகள் ஆகின்றன
வெட்டிப் பேச்சு வீரர்கள்
மிரண்டோடுகின்றனர்.... ...
உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது
ஏழைகளின் முகங்களில்
புன்னகை உதயமாகிறது.

(தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்
வே. பிரபாகரனால் 1981 ம் ஆண்டில் எழுதப்பட்டது)





# உயிர்த்தெழுதல்

விழ விழ எழுவோம்!
விழ விழ எழுவோம்!
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!

விண்ணின் குண்டுகள்
வீழ்த்திய எங்கள்
மண்ணின் மரங்கள்
மறுபடி தழைத்தன!
நெடுங்கடக்கரையில்
நேற்றும் புலிகள்
சடுங்குரல் கேட்டோம்....
தோள் சிலிர்த்தது!

விழ விழ எழுவோம்!
விழ விழ எழுவோம்!
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!

தண்ணீர் விட்டோ
எரிமலை தணியும்?
விண்ணின் புயலை
வேலி தடுக்குமோ?
கடலைக் குடிக்க
நினைத்தவன் யாரடா?
அட! இங்கெம்மை
அழிக்கவும் கூடுமோ?

https://tamileelamarchive.com/



விழ விழ எழுவோம்!
விழ விழ எழுவோம்!
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!

கல்லறைகளுக்கும்
உயிர் இங்குள்ளதால்
கொல்வார் கொலை வெறி
இங்கெடு படாது!
பந்தி பந்தியாய்
உயிர் அழியலாம்....
செந்தமிழ் ஈழம்
செத்து விடாது!

விழ விழ எழுவோம்!
விழ விழ எழுவோம்!
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம்!

- உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் -





# புலிகளை வாழ்த்துவோம்

- கவிஞர் காசிஆனந்தன் -

புத்தெழில் கொஞ்சும் தமிழீழத்தில்
தித்திப் பளிக்கும் முஸ்லீம் சிறுவரின்
முத்தம் வாங்கி முழங்கு போர்க் களத்தே
இத்தமிழ் விடுதலைப் புலி எழுகின்றான்...

எங்கள் சிறிய பிள்ளைகள் எழுச்சி
பொங்கிப் படைக்கும் புலிகள் தோளில்
தொங்கி ஆடத் துடிக்கும் காலம்...

மதங்கள் வேறுதான் மனங்கள் நூறு
விதங்களா? இல்லை! தமிழினம் ஒன்றே!

கற்றவர் மலிந்த கலையாழ் மண்ணும்
அற்புத மீனிசை அமைந்த தேனாடும்
நெற்கதிர் குலுங்கும் வன்னி நிலமும்
நற்றமிழ் முதுபுகழ் மாந்தை நன்னாடும்
உற்ற கோணமா மலையும் மக்கள்
பற்றிவாழ் காத்தான் குடிப்பட்டணமும்
கற்குடாக் கடலும் நாட்டுக் கவிதை
முற்றிப் பழுத்த அக்கரைப் பற்றும்
விற்பனை மடுவின் விரிந்த காடும்
பற்றிப் பறிக்க எண்ணிய பகைவர்
நெற்றி பிளந்த நெருப்பின் புலிகளை
நற்றமிழ் ஈழ நாடு மறக்குமோ?

கழுத்தில் நஞ்சு கட்டிய தமிழர்
நிலத்தின் புலிகளை நெஞ்சால் வாழ்த்துவோம்!

https://tamileelamarchive.com/



# எனக்கும் வேண்டும் விடுதலை !

- வானம்பாடி -

இளைஞனே,
எங்கே விரைந்து செல்கின்றாய்;
என்னைப் பின்னே விட்டுச் செல்கின்றாய்.

கைகளில் மென்வளையலும்
கழுத்தில் தங்க வடமும்
உடலில்
தளிர்பட்டுச் சேலையும்
அழுத்தும் சுமையினால் நான்
சோர்ந்து போனேன்.

போதையூட்டும் காதல் வாழ்க்கை கனவுகள்
தெவிட்டி விட்டது எனக்கும்.
பொட்டிட்டு பூவைத்து என்னை
அழகு பார்த்து சிறை வைத்ததும் போதும்.

இந்நாட்டின் வீர மக்களை
என் வயிற்றில் சுமந்தேன்.
உன் வயல் வெளிகளில்
உன்னுடன் வியர்வை சிந்தினேன்.
எம் மண்ணின் விடுதலைப் பயணத்தில் நான்
உன்னுடன் கூட வரலாகாதோ?

அன்பனே,
எனக்கும் வேண்டும் விடுதலை!





# எழு ... நிமிர்!

சீச்... சீ.... என்னடி இது?
அழுகையை நிறுத்தி
எழுந்து நிமிர்!
எனைப் போல் நீயும்
உடல் வதைப் பட்டாய் அவ்வளவு தானே;
ம்....... எழுந்து சிரி!

கண்ணீரைத் துடைத்து விட்டு
காலத்தைப் பிரசவி!
தலையைத் தாங்கும் கைகளை உயர்த்தி
நாசத்தை சங்கரி!
காட்டைப் பிரட்டு!
கடலலையைக் கையிலெடு!
காற்றை ஊது!
கடும் நெருப்பை தீயிலிடு!

மாற்றங்கள் வேண்டும்.
மறுபிறப்பில் வேண்டாம்;
இப்பிறப்பில் உண்டாக்கு!
குளிர் நிலவில் குதூகலிக்க
குழந்தைகளை விட்டு விட்டு,
சூரியனைப் பிடி!
தென்றலால் முடியாது;
புயலைத் துணைக்கழை!

குனிந்து நடவாதே;
குற்றமுள்ளோர் யாரும் மோதிவிடக் கூடும்.
நிமிர்ந்து செல்!
பாதையைக் கவனி!
வழியைச் செப்பனிடு!

- ஜெய் -





## யாராவது வாருங்கள்!

யாராவது வாருங்கள்!
பயங்கரவாதிகளுக்கு எதிராக
ஒரு வழக்கு நடக்கின்றது!
என்னை, என் பெண்மையை
ஈச்சம் புதருக்குள்
இழுத்துச் சென்று
என் ஜீவ உணர்வுகளைச்
சாகடித்ததற்கு
சாட்சியங்கள் இல்லையாம்!
புழுதியில் கரைந்துவந்த
என் மரண ஓலத்தை
யாராவது கேட்டிருந்தால்
சாட்சி சொல்ல வாருங்கள்!
தழும்புகளையும், காயங்களையும்
தாங்கிய என் உடலும்,
இரத்தச் சிதறல்கள்
படிந்த என்புடவையும்
நடந்த கொடுமைக்குப்
போதுமான சாட்சியமாய் இல்லையாம்!
இதோ!
அமைதியாய் இருக்கின்ற
இந்தப் புதர்களும், மரங்களும்
பனைகளும், தென்னைகளும்
நைய்ந்த வேலிகளும்
அந்தச் சிறிய குடிலும்
இன்னும் பேசக் கற்றுக்கொள்ளாத
என் இளைய மகனும்

https://tamileelamarchive.com/



நடந்த கொடுமையைக்
கண்ட சாட்சியங்கள்
யாராவது வாருங்கள்!
நடந்தது என்ன, எப்படி என்று
வர்ணனை இன்றி வகுத்துச் சொல்லுங்கள்!
யாராவது வாருங்கள்!

- ஜெய் -





# காற்றே! அவளிடத்திற் கூவு !

அடுப்பும் நெருப்பும்
உன்னைச்
சித்திரவதை
செய்வதை
அவர்கள்
வேடிக்கை பார்க்கிறார்கள்.

உனக்குள் அழுதிடும்
உன் விழிகளில்
ஈரம்
கண்ணுக்குள் புகை
என்றே அவர்கள்
காரணம் சொல்வார்கள்.
பாத்திரம் பூசியே
உன் இளமை
கரைந்து கரியானது.
வீற்றிருக்குமிவர்களுக்கு
இது......
விளங்காத விடயமல்ல
கனவுகளை முடைமுடையாய்
சுமந்தே.....
உருக்குலைந்து போகுமுன்னே
இவர்கள்
புரிந்து கொள்ளப் போவதில்லை

https://tamileelamarchive.com/



பொன் விலங்கு மாட்டியே
பூட்டி வைப்பார்கள்.

அதல பாதாளமும்
சுற்றி வந்து
சுதந்திரத்தைச்
சொல்லித் தந்த
காற்றே!
அவளிடத்திற் கூவு!

அடுப்பில் நீ எரிக்கும்
நெருப்பு
உன் நெஞ்சுக்குள்
விடுதலைத் தீயாகட்டும்!
நீ பாத்திரங்களை
மோதிக் கொள்ளும்
சத்தம்
உன் காதுகளில்
போர் முரசமாகட்டும்!
உன் கனவுச் சுமைகள்
பொன் விலங்கொடிக்கட்டும்!
கால்கள் நடந்து
களத்துக்கு வரட்டும்!
நெஞ்சங்கள்
நிஜங்களைத்
தரிசிக்கட்டும்!

(சுதந்திரப் பறவைகள்)





# போர்ப் புஷ்பங்கள்

அம்மா!
ஒடுங்கிவிட்ட - ஆனால்
ஒளிபான உன் கண்கள்,
உன் இயக்கத்தை இம்சிக்கும்
ஈர விறகுகள்,
இடைவிடாத இருமல்,
இதயச் சுவர்களின் இடுக்குகளில்
இடம் பிடித்துக் கொண்ட
அந்த ஆஸ்துமா,
அம்மா....!
என்னை மன்னித்துவிடு!
பாசறையில்
பாதி இரவுகளில்
என் சண்டாள விழிகள்
சயனத்திற்கு சம்மதிக்காதபோது
உன் நேச முகம் வந்து
நினைவுகளைச் சுடுகிறது
என் பெண்மை விழித்து
உன் தாய்மையை தரிசிக்கிறது.

மண்
எனைப் பாதித்தது
கடமை
கைகளைச் சுட்டது.
மனத்தின் மெல்லிய பிரதேசங்கள்
மௌனமாக ஒரு பிரளயத்தைப் பிரேரித்தன
வானொலி நாடகத்தில்

https://tamileelamarchive.com/


வசனமில்லா வேஷமெமக்கு
என்னால்.....
முடியவில்லையேயம்மா.....!
அதனால் தான் - உன்
கைகளைக் கடந்து
கனதூரம் வந்துவிட்டேன்.

நீ
சிறைகளுக்குள் சிநேகமாய்
கூட்டி வளர்த்த இக்குயில்
இன்று,
தேசயுத்தத்தில் ஒரு
சுதந்திரப் பறவை

அம்மா!
என்னைப் புரிந்துகொள்
நீயோ - என்
வயதிற்தாய் வருத்தப்படுகிறாய்
நானோ - ஒரு
வம்சத்திற்காய் வழக்காடுகிறேன்

வயல் வீசும்
அராபிய நிலங்களில் - என்
சுயம்வரத்திற்காய்
சொத்துச் சேர்க்கும்
சோதரனுக்கு கூறிவிடு
வழமிழந்த மண் மீட்டே - என்
வசந்தங்களுக்கு வரவு என்று!





என்னோடு இன்னும்
எத்தனை தோழியர்கள்
நாம்
கனவுகளை அல்ல
கனரக ஆயுதங்களைச் சுமக்கும்
காவல்க் கன்னியர்கள்
புதிய பூபாளத்திற்காய்
புறப்பட்ட
போர்ப் புஷ்பங்கள்!!

- சிவதாஸ் -

❋❋❋

https://tamileelamarchive.com/



# அகதியின் தேடல்கள்

காலச் சிற்பி செதுக்கிய
காயம்பட்ட
சிலைகள்.

காக்கைக் கூட்டுக்குள்
வாசம் செய்யும்
இவர்கள்
கூடுகட்டத் தெரியாத
கூவி அழும் குயில்கள்.

சுந்தரத் தரைகளின்
நந்தவனமொன்று
தீ பிடித்துக் கொண்டதால்
வசந்தத்தைத் தேடிய
இவர்கள் - இந்த
பனி விழும் பாலைவனங்களில்
ஒட்டகமாய் சுமப்பதென்னவோ
துயரங்களைத்தான்.

வேலைத் தளங்களில்
வியர்வை மழையில் தேகம் குளிக்கும்
கூடவே
முதலாளி போர்வையில்
புரியாத பாஷையில்
வசைமாரி வந்து
இதயத்தில் தீ மூட்டும்....





அம்மாவின் கடிதங்கள்
உள்வீட்டுக் கஷ்டங்கள்
நினைவோடு வந்து
கண்ணில் நீர் பூக்கும்
பெருமூச்சு தாலாட்டும்.

அடுக்கடுக்காய் குவிகின்ற
எச்சில்
கோப்பைகளின் மத்தியில்
ஒன்று ஒன்றாய்
ஒவ்வொன்றாய்
கைசலிக்க கழுவி
வசந்தத்தைத் தேடுகிறோம்.

அலுவலக மேசைகளில்
கலைந்துபோன கோப்புக்களில்
ஒவ்வொன்றாய் தூசுதட்டி
வாழ்க்கையைத் தேடுகிறோம்.

வாழ்வு
ஈழத்தில் கிடக்கிறது
தேடல்
தேசங்களெங்கும் நடக்கிறது.

- கஜன் -

https://tamileelamarchive.com/



# தெளிவுகள்

தம்பி,
போராட்டமென்றும்,
புரட்சியென்றும் நீ
கனத்த ஆயுதங்களுடன்
களத்தில் இறங்கியபோது
அம்மாவுடன் இணைந்து
நானும் தடுத்தேன்.

ஆனால் இன்றோ
அன்னிய நாட்டில்
அகதியாய்.....
அனாதையாய்.....
நாயிலும் இழிவாய்
நசுக்கப்படும்
சந்தர்ப்பங்களில் தான்.....

உனது தீர்க்கதரிசனப் பார்வை
என்னில் தெளிவு பெற்றது.
எமக்கு வேண்டும் எங்கள் நாடு.

உன்னுடன் உன்னைப்போல்
எத்தனை.... எத்தனை பேர்
காட்டிலும் மேட்டிலும்
அலைந்த போதிலும்
இலட்சிய உறுதியும்
தெளிந்த மனதும் கூடவே.





குழந்தைப் பருவத்தில்
மண்வீடு கட்டி
அழுது குழப்பி
பின்
சேர்ந்து சிரித்ததும்,
பொன்வண்டு தேடி
பொழுதெல்லாம் திரிந்ததும்
இன்னும் என்னென்னவோ...

ஆனால்
இன்று இங்கு
அமைதியிழந்து,
நிம்மதியிழந்து....
அகதிப்பட்டத்துடன்....

அன்றைய உனது
தீர்க்கதரிசனப்பார்வை - இன்று
என்னில் தெளிவு பெற்றது.
"எமக்கு வேண்டும் எமது நாடு!"

- நிரஞ்சனா -

https://tamileelamarchive.com/



# கேட்கிறதா எங்கள் குரல் ?

தீக் குளிக்கும் தேசத்தில்
வேர் விட்ட விதைகள் குரல்
கேட்கிறதா உங்களுக்கு?

புழுதி படிந்த முகங்களும்
ஏக்கம் சுமந்த விழிகளுமாய்
சொந்தம் தேடும் எங்கள் சோகம்
புரிகிறதா உங்களுக்கு?

பற்றி எரிந்து கருகிய
பனை மட்டை வேலியின்
படலை முகப்பில் இன்னமும் அழியாத
இரத்தக் கறையில் தெறித்துக் கிடக்கும்
அப்பாவின் முகம்....

முற்றத்துக் கொடியில்
நிறம் நரைத்து கிழிந்த சேலை
செல் அடியில் சிதைந்த
அம்மாவின் உடலாய்....

கழுத்தை சுற்றிய ரயர்களில்
பாதி எரிந்து
கருகிய பிணங்களாய்
இரத்த உறவுகள்....





செல் குண்டுகளுக்கு
இரையாகிப் போன வீடு
முகம் இழந்து...

இரப்பைச் சுவர்கள்
பிடிசோற்றுத் தவம் கிடக்க..
சரிந்து கால் நீட்ட
கிடையாத திண்ணையும்
ஒதுங்கக் கிடையாத
பள்ளிக் கூடமும்
எதிர்காலம் தனியமாய்
நீண்டு கிடக்கும்.

ஆனாலும்
முற்றத்து முள்முருக்கு
ரத்தச் சிவப்பாய்
பூத்துக் கிடக்கும்.

- கஜன் -

❋❋❋

https://tamileelamarchive.com/



# திரும்பிப் போவேன்

எனது மக்களையும்,
என் இனிய தேசத்தையும்
நினைத்து அழுகின்றேன்.
தந்தையரில்லை;
தாய்மார் விதவைகளாயினர்.

எங்கும் ஒப்பாரியும்
புலம்பலும்
அழுகையும் பற்கடிப்பும்;
அவலம் நிறைந்தது
மண்ணில் இன்னுமாய்.

அருமையானவர்களே!
என் உயிரினியவர்களின் சாவு
தினமும் இந்திய இராணுவத்தால் எழுதப்படுகின்றது.
எம் இனிய மண்ணின் நாட்களைச்
சிறையிட்டார்கள்.

நானோ
அந்நிய தேச மொன்றில்
அகதி என முகவரித்து
எதிர் காலத்தை இயற்ற மறந்தவனாய்,

சொந்த மண்ணில்
எனக்கு சுதந்திரமில்லை என்று
அந்நிய மண் வந்த புத்தடிமை நான்.





என் உடலில் வலுவிருக்கும்.
என்னுள் பொதிந்த
"ஒரு துளி மனிதம்" போதும்
திரும்பிப் போவேன் மண்ணுக்கு.

- சுபா -

https://tamileelamarchive.com/



# சின்ன வீரனே

துப்பாக்கியோடு திரிகின்ற சிறுவனே!
பக்கத்தில் வா!
உனக்கு வயது பதின்நான்கா? பதினைந்தா?
எத்தனையாக இருந்தாலும்
மகனே! அருகில் வா -
உன் பாதத்தைக் காட்டு
தூசி படிந்த கால்களை
சேவிக்க விரும்புகிறேன்

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
காலையில் சத்தியப் பிரமாணம் செய்யும் போது
இந்த மந்திரச் சொல்லை
விசுவாசிப்பதாகக் கூறுகின்றாயே!
இந்த வேத மந்திரம்
உன்னை மலைபோல் நிமிர்த்துகின்றது.

உனக்குத் துப்பாக்கி தூக்கும் வயதல்ல...
வாய்ப்பாடு பாடமாக்கும் வயது.
என்றாலும் நீ நடக்கும் போது....
அட்டத் திக்கும் அதிர்கின்றதே!
நீ மூச்சு விடும் போது...
புயலொன்று புறப்படுகின்றதே!

உன் வயதில் நானென்ன சாதித்தேன்
ஒன்றுமில்லை.... ஒன்றுமேயில்லை.





கிட்டி அடித்தேன்
கிளித்தட்டு மறித்தேன்
வெள்ளையப்பா வீட்டு விளாத்திக்கு
கல்லெறிந்தேன்.

கையில் துவக்கேந்தி களத்தில் நிற்கின்றாய்
கொட்டும் மழையினிலும் குறிபார்த்து நிற்கின்றாய்
தூங்காத விழியோடு சென்றிக்கு நிற்கின்றாய்.

உன் பாதத்தைக் காட்டு
கால்களை முத்தமிட கவிஞன் விரும்புகிறேன்.

நீயும் உன் போன்ற புலிகளும்
களத்தில் உலாவரும் காலம் வரை
உலகத்துப் படையெல்லாம் ஒன்றாய் எதிர்க்கிலும்
வேங்கைகள் பாய்ந்து வெற்றி கொள்ளும்.

(உணர்வு)

https://tamileelamarchive.com/



# விதியை நொந்திடல் அல்லோம் !

வானமும், பூமியும்
சேர்ந்து நூல்நூர்த்தது
ஆடையின்றிப் போன எம்
தேச வயல் வெளிகளுக்காய்.

காற்று வெளியிடை
மரத்தடி நிழலில்
ஆற்றம் கரைகளில்
ஏக்கம் சுமந்த
எங்களின் அழுகுரல்
இருண்ட உலகின்
செவிகளுக்கு கேளாது போயிற்று.

இடி விழுந்து
கந்தக குண்டு பொழிந்து
இன வெறிப் புயலடித்து
வரண்டது எம் - பூமி.
நீள வழித்துணை யென
நடந்தவன்
வீதியில் ஒரு வேலியில்
குண்டு தாக்கி தொங்கிப்
போயினன்.

அழுத மனங்களின்
காயத்தை மேலும்
உழுது உழுது எத்தனை
செயின் புளொக்குகள்
எங்கள் தெருக்களில்.





இனியும்
எனது கண்கள் அழுவதற்கும்
எனது கைகள் கூப்புதற்கும்
எனது குரல் அபயம் என்றிடவும்
முடியாது காண்!

விதியை நொந்திடல்
அல்லோம்;
வேங்கைகளாய்
எழுவதே வாழ்வாய் ஆவோம்.

- சுபா -

https://tamileelamarchive.com/



# ஒரு புதிய புலர்வுக்காய்....

- ஹேமா -

மீண்டும் சுழலும்
தர்மச் சக்கரம்
எங்கள் தாயக காலடி மண்ணை
உழுது செல்லும்.
கிழக்குத் திசையில்
மழை பார்த்து விதை விதைத்த
மருத நிலங்களில்
விதைகளுடன் சேர்த்து
வேர்களையும் புரட்டிவிட்டுப் போகும்
புயற்காற்று
எங்கள் பகல்களையும் இருட்டாக்கும்.

மனிதர் நாங்கள் என்பதை மறந்து
மரங்களுக்குக் கீழே பாய்களை விரித்து
மண்ணிலே குழிதோண்டி உடல்களை நுளைத்து
வாழத் தொடங்குவோம்
ஒரு புழுவிலும் கீழாய்.

அரபுத் தாயகத்தில் வாழ்நிலம் இழந்த
பாலஸ்தீனத்தின் கண்ணீர்த் துளிகள்
ஈழமண்ணின் கிழக்குக் கரையிலும்
பட்டுத் தெறிக்கும்.

கல்லாற்று வாவியில்
முன்னிரவில் கேட்ட
பாடும் மீன்களின் ராகம் கேட்காது;
இன்னொரு கடலுக்கு இடம் பெயர்ந்திருக்கும்
அகதியாய் அவையும்.





இனவெறிச் சேற்றில்
சிக்கிச் சுழலும்
புத்தனின் தர்மச் சக்கரம்.

சாப்ரா, ஷாடில்லா
அகதிமுகாம்களில்
மனிதக் கழுகுகளால் குதறப்பட்ட
பாலஸ்தீன பிணங்களின் வாடை
கிழக்குக் கரையில் தென்படும் முகங்களின்
சுவாசப் படிக்கட்டுகளை
வந்து நிரப்பும்.

மொகஞ்சதாரோவில் முகிழ்த்த
மனித நாகரிகம்
கரைகளில் ஒதுங்கும்
உயிரற்ற பிணமாக.

பிணங்களில் தடுக்கி
வேகமாய் சுழலும் தர்மச் சக்கரம்
ஒருநாள் தனது
அச்சை முறிக்கும்.

எந்நாளும்
சூரியன் உதிக்கும் கிழக்கின் திசைகளில்
இருள் விலகி ஒளி புலரும்
ஒரு வாழ்வுக்காய்
நாங்கள் காத்திருக்கிறோம்.
புயற்காற்றில் கிளை ஒடிந்த மரங்கள்
ஒரு வசந்தப் பொழுதுக்காய்
காத்திருத்தல் போல
நாங்கள் காத்திருக்கிறோம்!

https://tamileelamarchive.com/



# கொக்கட்டிச்சோலையிலிருந்து ஒரு குரல்...

- மாணி நாகேஷ் -

ஓ, சிங்கள இராணுவப் பேய்களே!
நாங்கள் உங்களுக்கு
என்ன செய்தோம்?
எங்கள் கைகளில்
எந்த ஆயுதம் இருந்தது?
உங்கள்
துப்பாக்கி முனைக் கத்திகளால்
குதறப்பட்ட
பச்சிளம் குழந்தைகளின்
பிஞ்சுக் கரங்களில்
கிரனைட்டுக்களா இருந்தன....?
உங்கள்
கூரிய கோடரிகளால்
கிழிக்கப்பட்ட
கர்ப்பிணிப் பெண்களின்
அடிவயிற்றில்
வெடிகுண்டுகளா
இருந்தன?
தலை சிதைக்கப்பட்ட
தள்ளாத கிழவியவள்,
எந்தப் பாசறை
சென்று வந்தாள்?
குடு குடு கிழவனின்
நடுங்கும் கரங்களில்
ஏ.கேயா இருந்தது?
நாங்கள்





உங்களுக்கு என்ன செய்தோம்?
"தமிழர்கள்"
என்பதைத் தவிர.
வானமே இருண்டு
சோவென்று அழுததே!
காற்றும் சில கணம்
திகைத்து நின்றதே!
உங்களின்
நரமாமிசப் பசி மட்டும்
அடங்க மறுத்ததே!
எங்கள் உடல்களை
மண்ணில் புதைத்தீர்
எங்களில் பலரை
உயிருடன்
எரித்தீர்
இன்னும் சிலரை
கிணற்றிலும் எறிந்தீர்
எங்கள் உணர்வுகளை
எங்கே புதைப்பீர்?
ஏ, இனவெறி அரசின்
கூலிப்பட்டாளங்களே!
நேற்றுப்போல்
இன்றுபோல்
நாளையும் எழுவர்;
எங்கள் புலிகள்
நெருப்பெனவே
உங்கள் வாசலில் வருவர்.
எங்கணம் அவர்களை
எதிர்கொள்ளப் போகிறீர்.
அவர்கள் கரங்கள்
வெறுங்கைகள் அல்லவே.

https://tamileelamarchive.com/



# கிழக்கின் கரைகள்

கனவுகள் கால்தடுக்கி
வீழ்கின்ற போதெல்லாம்
அந்த மண்ணின் பசுமைகளில்
நினைவுகள்
இளைப்பாறிக் கொள்வதுண்டு.

நீலவானக் கோடிவரை
நீண்டு கிடக்கின்ற பசுமை
தென்றற் காற்றுக்கு
தாலாட்டுச் சொல்லித்தரும்.

பொன்னிற வெய்யிலில்...
சின்னப் பறவைகளின்
கீதக் கதம்பங்களில்....
சில்வண்டுக் கூட்டத்தின்
சங்கீத மழைகளில்
மேய்கின்ற மந்தைகளும்
சுகமாய் நனையும் - அந்த
கிழக்கின் கரைகளை
காயப்படுத்தியது யார்?

சந்தோஷக் கும்மிகளும்
வட்டக்களரிகளும்
வசந்தன் பாடல்களும்





ஏலேலோ... கேட்கின்ற
கட்டு மரங்களும்
கோலாட்டச் சிந்துகளும்
இன்றெங்கே போனது?

பாடும் மீன் வாவிகளில்
கண்ணீர் உப்புக்கள்
எப்படிக் கலந்தன?

காற்றில் கூட
மரணத்தின் வாசனையை
பூசி விட்டது யார்?

புல்வெளிப் பாதைகளில்
கால்தடுக்கும் கபாலங்கள்...
எரிகின்ற குடிசைக்குள்
அவலக்குரல் எழுப்பும்
சின்னக் குழந்தைகள்..
கடலோரம் கிடக்கின்ற
தலையில்லா முண்டங்களுமாய்
தேசம் சிதைந்து கிடக்கும்.

ஆனாலும் - நாளை
கிழக்கின் கரைகள்
"புதிதாய் விடியும்"
நம்பிக்கை சுமந்து செல்வோம்.

- கஜன் -

https://tamileelamarchive.com/



# எல்லைகள் நீளவே எழுவோம்

விண்ணில் ஒலித்த
ஆன்மக் குரல்கள்
கொக்கட்டிச்சோலை
செக்கச் சிவந்தது.

குண்டுகளால் துளைத்து
கொடுவாளால் வெட்டி
எங்கெல்லாம் விடுதலை
உணர்வு உண்டெனை
அங்கம் பிளந்தொரு
ஆய்வு செய்திட நாம் என்ன செய்தோம்?

மீன்பாடும் வாவிக்கரையில்
மருத நிலக் காட்டில்
எமது மக்கள்
எல்லாம் இழந்தும்
இனி இழப்பதற்கோ
எதுவுமற்று....

காற்றை
நச்சுப்படுத்தி
சுவாசத்தை
நிறுத்திய நீ

எங்கள் வயல் வெளிகளில்
இனியும் நில்லாதே! ஓடு!





நாம்
வாழ்வதற்காகவே
அழுத கண்ணீரும்
சிந்திய குருதியும்
கூரிய வாளாய்
குண்டுகளாய்
எல்லைகள் நீளவே எழுவோம்.

- சுபா -

https://tamileelamarchive.com/



# புனித யாத்திரை.....

அம்மா!
எங்கள் மண்ணில்,
பள்ளி சென்றதும், பாதையில் வரும்
வெள்ளம் மீதிலே கல்லெறிந்ததும்
துள்ளி ஓடியே தும்பி பிடித்தும்
நின்று போனது.

வானம் பாடியின் கானம் மறைந்தது
வசந்த காலத்தின் கோலம் அழிந்தது
பேரினவாதப் பெரும் புயல் வீசியெம்
தேசத்தின் கற்பையே சூறையாடிற்று.

அகர முதல எழுத்தையெல்லாம்
எழுதப் பழகிய எங்கள் மண்
உடும்பு பிடித்து ஊர்ந்து சென்று
தவழ்ந்து வளர்ந்த தாயகமண்.

மண்வீடு கட்டி மகிழ்ந்து விளையாடிய மண்
கிளித்தட்டும் தாச்சியும் கிட்டிப் புள்ளும்
கண்டு களித்த மண்.

எனதருமைத் தாயே
புனித யாத்திரை ஒன்றிற்காய்
புறப்படுகிறேன் உன் புதல்வன்
வழியனுப்பி வைப்பாய்
வாயார வாழ்த்தியே.





எங்கள் தாய் மண் ஏங்கி அழுதது
எனக்குள் ஓர் குரல் ஓங்கி ஒலித்தது.

குளிரும் போது போர்வையுள்
குறுகி முடங்கும் இவனா போனான்
தாயின் சேலையில் பின்னே தானோடித் திரிந்தவன்.

தாலாட்டுப் பாடல் மறந்திடாதவன்
தாயழுதால் தானழுதவன்
இவனா போனான் என்பாய்

எங்கள் தாய்மண் ஏங்கி அழுதது
எனக்குள் ஓர் குரல் ஓங்கி ஒலித்து.

பச்சை வயல்கள் பூத்துக் குலுங்கவும்
தென்றல் காற்று தேசத்தை வருடவும்
சலசலவென்று ஆறுகள் ஓடவும்
பாட மறந்த குயில்கள் பாடவும்
இறுகிய முகங்களில் இனிமை பிறக்கவும்

புறப்படுகிறான் உன் புதல்வன்
வழி அனுப்பி வைப்பாய்
வாயார வாழ்த்தியே.

எங்கள் தாய்மண் ஏங்கி அழுதது
எனக்குள் ஓர் குரல் ஓங்கி ஒலித்தது.

- களத்திலிருந்து -

https://tamileelamarchive.com/



# நானும் எனது மண்ணும்

காக்கை குருவி
கடுமிருட்டில் ஆள்காட்டி.
நாக்கை நீட்டி
நடுத்தெருவில் சொறிநாய்கள்.

காலம்தவறாமல்
கதவண்டை பூக்கின்ற
மல்லிகைகள். செவ்வரத்தை, செவ்வந்தி.
பூமரத்தைச் சுற்றி
புதுக்கவிதை படிக்கின்ற பூவண்டு.
மூச்செடுத்து முழங்குகின்ற சில்வண்டு.

ஆசைத்தொடுவானை
அலங்கரித்துப் பறக்கின்ற வண்ணத்தி,
பட்டமரப்பகுதி பார்த்து
கொத்தித் தேடுகின்ற மரங்கொத்தி.

முற்றிச் சரிகின்ற
மொட்டைக் கறுப்பனினை
நீளநின்று அறுத்தெடுக்கும் பெண்டுகள் போல்,
பாடிப்பறந்து, பயமேதும் மறந்து,
முற்றாத நெற்கதிரை
வெட்டிச் சரிக்கின்ற வெட்டுக்கிளி.





உச்சிப் பறக்கின்ற
ஊசிவால் தும்பி.
தாவித் தாவி
தந்தி அடிக்கின்ற அணில்ப்பிள்ளை.

வளைந்தூரும் சிவத்தட்டை.
தவளை, தேரை.
காலம் சுணங்காவல்
வேலை புரிகின்ற சித்தெறும்பு.
காற்றின் சீழ்க்கை, காவோலைச் சரசரப்பு.
உழைத்துக் களைத்து,
சலிப்போடு பாய்கின்ற அருவியின் சலசலப்பு.

இத்தனையும்......,
இல்லை! இதுபோல எத்தனையோ...
என்னைச் சுற்றி,
என் உணர்வுகளைச் சுற்றி
கலைவடித்த இளங்கலைஞர்.

எழுந்து, பதிந்து,
ஆர்ப்பரித்து, அடிபணிந்து
உவகை தருகின்ற கடலலைபோல்,
என்னுள்ளே புகுந்து
எனக்குள்ளே இசையமைத்து
என்னோடு சிரித்து
எனக்காக சேர்ந்தழுது
பூரித்து, புளகித்து
ஆசையாய் புகழ்ந்து, அழகாக முத்தமிட்டு

https://tamileelamarchive.com/



எந்தன் இதயத்து நரம்புகளில்
பின்னிப் பிணைந்து;
நானாக வாழுகின்ற
என்தேச
இயற்கை அழகதனை
எப்படி மறப்பன்.

- ஜெய் -





# தாயே வழியனுப்ப வா

மதுரையில் நீதி கேட்டு
கண்ணகி காற்சிலம்புடன் நடந்தாள்
மட்டக்களப்பில் நீதி கேட்டு
"பூபதி" பசித்த வயிறுடன் கிடந்தாள்
காந்தி பிறந்த தேசத்துக்கு
திலீபன் கன்னத்தில் அறைந்தான்
.... அன்னை பூபதி ...
அடிக்கவில்லை; காறி உமிழ்ந்தாள்.

"இந்திய அரசே! வேங்கைகளுடன் மோதாதே"
நிறுத்து ! என்று போராடினாய்
உண்ணாநோன்பிருந்து உருகினாய்.
அவர்கள் உன் மூச்சையே நிறுத்திவிட்டார்கள்.
பாரத அரசு! உன் சாவுக்குப் பின்பு
பாதக அரசு என்பது புலனாயிற்று.
அம்மா!.... உன் இறப்பு
இந்திய அரசை அம்மணமாக்கியது.
வெட்கம் கெட்டவர்கள்
வெளியில் உலாவுகின்றனர்.

தாயே! நீ...
உண்ணாநோன்பிருந்து மரணித்த
முதற் பெண்மணி!
தமிழீழ மக்களின் கண்மணி
தியாகப் புயலே! எங்கள் தேசத்தின் கனலே!
உன்மூச்சுக் கலந்த காற்று
எங்கள் மூக்கில் பட்டாலே....
வீரம் பிறக்கும்
தாயே! வணங்குகின்றோம் வாழ்த்துச் சொல்லு.
படைகள் புறப்படுகின்றது.
வழியனுப்ப வா.

(தமிழீழம்)

https://tamileelamarchive.com/



# விடிவை நோக்கி...!

திசைகள் சிதையும்
துப்பாக்கிச் சத்தங்கள்...

பாலைவன இருளாய்
வாழ்வு
வெறுமையாய் - ஆனாலும்
ஒரு அர்த்தத்துடன்...

அழையா விருந்தாளியாய்
மரணம்
எந்நேரமும்
எம் கதவுகளைத் தட்டும்
வாசற் படிகளில்
சோகம்
சுருண்டு கிடக்கும்...

பல்லியும் பாம்பும்
ஒதுங்கும்
பதுங்கு குழிகளில்
சிலவேளைகளில் நாமும்
ஜந்துகளாய்...

புன்னகை ஞாபகங்களை
தொலைத்த உதடுகளில்
விரக்தி
இறுகிக் கிடக்கும் - ஆனாலும்





விழிகளில் வளரும்
நம்பிக்கை விழுதுகள்
கல்லறைக் கனவுகளின்
சுவடுகளில்
தடம்பதித்து முன்னேறும்
இளையவர் பாதங்கள்...

தியாகங்களின் உதிரத்தில்
உறுதிபெறும்
இந்தமண்
நாளை புதிதாய் மலரும்
அந்த
திசையை நோக்கி
நாமும்!

- கஜன் -

# என் பாதி உயிரே!

என்
உதிரத்தில் பங்கெடுத்த
என் பாதி உயிரே!
என் கண்களைப் போல,
என் இதயமும்
அடிக்கடி கசிவதற்கான காரணத்தை ஆராய்ந்தேன்.

உன்னைப் பற்றிய
ஈர நினைவுகளே
என்னை
அடிக்கடி காயப்படுத்துகின்றன.

ஆடி மகிழ்ந்ததும்,
அரவணைத்துக் கொண்டதும்,
பங்கிட்டு உண்டதும்,
அடிபட்டுக் கொண்டதும்,

எங்கள்,
நேசம் நிறைந்த அம்மாவை,
அணைத்துப் படுத்துறங்க
இராப்பொழுதுகளை நாங்கள்
பாகமாய் பிரித்ததும்.......

வேண்டாம்!... வேண்டாம்!
எல்லாமே.... ரணம்தான்!





என் உயிருக்கு
நேரானவனே!
உன்னைப் பற்றியே
அறிந்து கொள்ளாத இளவயதில்
தேசத்தை நேசிக்க
எப்படி முடிந்தது?

உன்னைக் கொடுத்து
மண்ணைக் காக்க
எப்படித் துணிந்தாய்?

கண்ணீரில் கசங்கிய
அவசரக் கடிதத்தில்
அம்மா, அரைகுறையாய்
எழுதியிருந்தா;

வந்த செய்தியில்
கருகிப் பின் துளிர்த்தேன்.

மலர்ந்த முகமும்,
சிந்தும் இளம் சிரிப்பும்,
ஒளி கொண்ட உன் விழியும்
செம்மண் தரையிலே,
சிதறிக் கிடந்ததாம்
யாரோ ஒருவர்
செய்தியாய் சொன்னார்......

https://tamileelamarchive.com/



என் பாதி உயிரே......!
இவ் அனல் வரிகள்,
என் மீதி உயிரையும் பறித்துச் சென்றன.

என் உதிரத்தில் பங்கெடுத்த
என் பாதி உயிரே!
என் கண்களைப் போல்.... என் இதயமும்,
என்பும், தசையும், தசையிட நார்கள் யாவும்
அடிக்கடி கரைவதற்கான காரணத்தை ஆராய்ந்தேன்.

- ஜெய் -





# துயர்பட்ட இரவும் விடிகாலைப் பொழுதும்

ஒரு இரவுக்குப் பின்,
கிழக்கிலே மீண்டும் எழுந்து
பூமியை நிரப்பும் சூரியனைப் போல
கிழக்குக் கோடியில் கால்கள் பதித்து
நாங்கள் எழுந்தோம்.

நிலங்களை வென்று நிமிரும் கதிர் போல
காரிருள் விலக்கி,
மனித முகங்களுக்கு ஒளிசேர்த்த மகிழ்வில்,
இருள் விலகாக் காடுகளின்
துயர் சூழ்ந்த பொழுதுகள்
மறைந்து போன பின்னும்,
துயர்ப்பட்ட இரவுகளில் தோழமையாய் நின்ற
இயற்கையின் மௌனத் துடிப்புகள்
இன்னமும் ஜீவிக்கின்றது.

உருமறைப்பு உடையுடன் உள்ளே நுழைந்த
எங்களைக் காப்பதற்காய்
இலையுதிர் கால வேளைகளில் கூட
இலையுதிராது
காடுகள் பச்சையாய் காட்சியளித்ததும்,

சருகுகள் மிதிபடும் சத்தங்களில்
வருகை எதிரிக்குத் தெரிந்து விடுமென்று
சருகுகளை நனைத்து, மழை நீர்
மௌனத்வதக் காவல் காத்ததும்,

https://tamileelamarchive.com/



கரையோர மணல் வெளியில்
காற்தடங்கள் மறைப்பதற்காய்
நுரையோடு கடலலைகள் புரண்டோடி வந்ததும்,

தேக்கு மரத்தின் நிழல்களில் நின்று
எங்கள் கால்களில் நிற்கும் எண்ணங்களில்
நாங்கள் விறைப்பானதும்
மெல்லத் துலங்கும் விடிகாலைக் கனவுகளாய்
எண்ணங்களில் விரிகிறது.

இந்நாளில்,
தோழமையுள்ள இயற்கையின் இருப்புக்காகவும்,
மனித முகங்களின் இருள் விலகிய களிப்பில்
சிரிக்கின்ற மழலையின் வாழ்வுக்காகவும்
எமது வாழ்வை நாம் தருவோம்.

வாய்களில் நுரைதள்ள மௌனிக்கும் பொழுது வரை,
அன்றி
அச் செய்தியோடு எம் தோழர்கள் வரும்வரை
தோழமையுள்ள இயற்கையின் இருப்புக்காகவும்
சிரிக்கின்ற மழலையின் வாழ்வுக்காகவும்
எமது வாழ்வை நாம் தருவோம்.

- ஹேமா -





# நாளையும் மறுதினமும்

- ஹேமா -

நேராய் தலைநிமிர்ந்து
நிற்கின்ற பனைகளைப் போல்
நாளை இம்மண்ணில்,
நாங்கள்
மனிதராய் பிறப்போம்!

காற்று வெளியில்
கைகளை வீசி நடந்து
உரக்கக் கூவுவோம்
"நாங்கள் மனிதர்
நாங்கள் மனிதர்
சுதந்திரமான நாங்கள்".

நாளை இனி.......

எதிரி நாட்டு விமானங்கள்
எம் தலைகளின் மீது
குண்டுகளுடன் சேர்த்து
மனித மலத்தையும்
வீசாது.

உடல்கள் கருகி
முகங்கள் சிதைந்த
பிணங்களை விலத்தி
உறவுகளைத் தேடோம்.

https://tamileelamarchive.com/



வானம் முழங்கும்
வேளைகளில் கூட
நாங்கள்
பதுங்கு குழிகளில்
ஒதுங்கும் அவலம்
நிகழாது.

வானத்தை வெறித்தபடி
ஒரு சகோதரியின் பிணம்
நிர்வாணமாய்
கரையொதுங்காது.

மனிதப்படுகொலையும்
கற்பழிப்பும்
"புனிதப் போர்" என்று
தனக்கு
பெயரிட்டுக் கொள்ளாது.

நாளை
எம் தாய் மண்ணில்
இவை எதுவும்
நடக்காது;
ஆனால்
புலிகள் மட்டும்
போராடுவார்கள்
ஒடுக்கப்பட்ட
உலக மக்களுக்காக!

- ஹேமா -





# நாங்கள் பனைமரங்கள்

நாங்கள்
பனைமரங்கள்.

யுகங்களின்
பரிதவிப்பில்
பிரசவித்துக் கொண்ட
வறண்ட பூமியின்
வாரிசுகள்.

பிரபஞ்சத்தில்
புதிய பெயரொன்றைப்
பிரேரிப்பதற்காய்
வறுமை வயல்களில்
விழுந்து முளைத்த
விருட்ஷங்கள்.

துயர் தோய்ந்த
இரவுகளின்
இருண்மையை விரட்ட
விழுதுகளையும் கிளைகளையும்
விட்டுப் பிரிந்த
நெருப்பின்
குழந்தைகள்.

நாங்கள்
கனவுதளின் மிதப்பில்
தடுமாறி

https://tamileelamarchive.com/



காற்றின் திசையில்
தலைசாயும்
நாணல்களல்ல.

நிமிர்ந்து நிற்கின்ற
நெட்டைப் பனைமரங்கள்.

கொட்டும் மழை
குமுறும் கடலலை
சுட்டெரிக்கும்
சூரியப் பார்வை
திக்குகள் திடுக்கிடும்
மின்னல் இடி முழக்கம்
மேகக் கதிர்வீச்சு
என்ன செய்யும்
எங்களை?

எங்கள் வீழ்ச்சி
மரணமல்ல;
விளைந்த பயிரின்
அறுவடை.

நாங்கள்
பனைமரங்கள்;
நிமிர்ந்து நிற்கின்ற
நெட்டைப் பனைமரங்கள்.

- ஹேமா -





# புலிகளோடு மக்கள்

- கவிஞர் முகில்வாணன் -

ஓடையில நீரோட கட்டுப்பாடு - அந்த
ஓடையில நீருக்குந்தான் தட்டுப்பாடு
பாடையில ஏற்றிடத்தான் திட்டம்பாரு - தம்பி
பாடம்நன்கு புகட்டுகிறான் ஓடுகின்றாரு..........

அண்ணன் தம்பி யாருமில்லை ஆறுகடல் சொந்தமில்லை
வேறுவழி தோணவில்லை போராடுவோம் வாடிபுள்ள
முத்துப்புள்ள .......... ஓ .......... முத்துப்புள்ள

யாருக்குயார் சொந்தம்புள்ள வேருக்குநீர் சொந்தமில்ல
ஊருக்குள்ள ஆமிபுள்ள உளக்கவேணும் வாடிபுள்ள
வள்ளிப்புள்ள .......... ஓ .......... வள்ளிப்புள்ள

ஏருழுதும் சோறுஇல்ல கார்முகிலும் ஓடவில்லை
போறஉசிர் போறதுதான் போராடுவோம் வாடிபுள்ள
முத்துப்புள்ள .......... ஓ .......... முத்துப்புள்ள

பூக்களுக்கும் காவலில்ல பூசைசெய்ய தெய்வமில்ல
தூக்கமில்ல ராத்திரில தூங்கிவிட்டா நாடுமில்ல
வாடிபுள்ள .......... ஓ .......... வாடிபுள்ள

நேற்றிருந்தோர் இன்றுஇல்ல காற்றுப்போனா ஒண்ணுமில்ல
தோற்றபுலி ஏதுமில்ல துவக்கெடுப்போம் வாடிபுள்ள
வள்ளிப்புள்ள .......... ஓ .......... வள்ளிப்புள்ள

பூவலுக்க தண்ணியில்ல பூவரசும் பூக்கவில்ல
ஆணுமில்ல பொண்ணுமில்ல அனைவருமே களத்தில்புள்ள
முத்துப்புள்ள .......... ஓ .......... முத்துப்புள்ள

https://tamileelamarchive.com/



# கலங்காதிரு!

எனது தாய் நாடே!

உனது மேனியில்
தலைவிரித்தழும் விதவைகள் போல்
நெடிதுயர்ந்து நிற்கும்
கரும்பனைக் கூடல்கள்.

வரண்ட நரைமண் நீளும்
சாம்பர் நிறத் தொடுவானில்
வரவிருக்கும் அழிவை
முன்னறிவிக்கும் கருநிழல்கள்.

உனது புதல்வரின்
தீனக்குரல் கேட்டு நீ
மனமொடிந்து போனாயோ?

கலங்காதிரு!

இப்பூமியின்,
விறைத்த மொழியும்
வீசும் உப்புக் காற்றும்
தகிக்கும் வெயிலுமே எமக்கு
வலிமை சேர்க்கும் ஜீவாகாரம்.





இம் மண்ணின்
கள்ளிக் காடுகள்
கரும்பாலைத் திடல்கள்
கரிக்கும் உவர் நீரே எமக்கு
இதங்கொடுக்கும் அரவணைப்புக்கள்.

காலங்காலமாக.....

வரண்ட இப்பூமியை
பச்சை முகிழ்த்துப் பேசவைத்த உன்
புதல்வரின் திண்ணிய உறுதியை நீ
மறந்து போனாயோ?

இப்புதல்வரின்
இளைய வம்சம், உன்
விடுதலைக் கீதமிசைக்க
உறுதி பூண்டிருக்கிறது தாயே!

- ஞானேந்திரன் -

https://tamileelamarchive.com/



# தொடரும் பயணங்கள்...

வாழ்க்கைப் புத்தகத்தின்
கடைசி அத்தியாயம்...
வெயிலில் வாடிய
வாழைத் தண்டுடல்
வயதான பெண்ணவள்.

கிடுகுவேலி
மட்டைகளின் எல்லைதாண்டி..
பனங்கூடல் வெளிதாண்டி....
உதிர்காலச் சருகுகளின்
சரசரப்புத் தாண்டி...
கண்குழியில் கசிந்த நீர்
புறங்கையால் துடைத்தபடி
தள்ளாடும் இருகால்கள்
திசையொன்றை நோக்கி
புயலாகப் போகிறது.

பத்துமாதம் சுமந்து
பெற்றெடுத்த தங்கமகன்
தாலாட்டுப் பாடி
தூங்கவைத்த சின்னமகன்
பிறந்த மண்ணின் துயர்துடைக்க
அக்கினிக்குஞ்சாகி
தீ வளர்க்கப் போனவரில்
விடுதலை வேள்விக்கு
நெய்யாகிப் போனமகன்...





தமிழீழப் போர்க்களத்தில்
உடல் சாய்ந்த செய்தி கேட்டு
பதறித் துடித்து
குமுறும் விம்மலை
நெஞ்சோடு புதைத்து
துப்பாக்கி வேட்டொலியில்
தப்பாமல் தடம்பார்த்து
வேலியோரம் வீழ்ந்து கிடக்கும்
எம் மண்ணின்
வீரவித்துக்களின்
முகம்பார்த்துப் போகையிலே,
துப்பாக்கி அணைத்தபடி
ஒரு கையில்
தாய் மண்ணைப் பிசைந்தபடி
குருதியில் குளித்தபடி
மாறாத முறுவலுடன்
உடல் விறைத்து, அவன்...

அவன்
தனித்துவிட்ட துப்பாக்கி
இவள்
கைதடவிக் கொடுக்கிறது.
".. வீரனடா.. வீரன்..."
முணுமுணுப்பு விம்மலாய்
அழுகையாய் வெடிக்கையில்

"ஆச்சி... அத்துவக்கை
என்னட்டைத் தாணை"

https://tamileelamarchive.com/



அருவிக் கண்கள்
இமை தூக்கிப் பார்க்க
இருகை நீட்டி
இன்னொரு சிறுவன்.

- கஜன் -





# தாயை நேசிக்க
# மீசை முளைக்கத் தேவையில்லை !

- கவிஞர் இரும்பொறை -

பாட்டன் பணக்காரன்தான்
அப்பன் அறிவாளிதான்.
ஆயினும்
சிங்களவனின் அடிமைதானே.

கொழும்பில்
கொடிகட்டியவர்கள்தான்
பொருள் குவித்தவர்கள்தான்.
இருப்பினும்
ஒருநாள் அகதிதானே.

மேல்நாட்டுப் படிப்பும்
வெளிநாட்டு வாழ்வும்
விரும்பினால் பெறலாம்தான்
அப்பொழுதும்
நாடோடியன்றோ?

அடிமையாய் வாழ்வதும்
ஆசையில் திரிவதும்
அஞ்சிச் சாவதும்
அவர்களோடு போகட்டும்.

நாம்
பிறந்தது போலவே

https://tamileelamarchive.com/



மனிதனாய் வாழ்ந்து
மனிதனாய்ச் சாவோம்.

எத்தனை பெரிய பாடம்
எழிமையாகப் படித்தது
இளைய பரம்பரை.

தம்பி,
புத்தகப்பை தொங்கவேண்டிய
உன் தோழில்
துவக்குக் கட்டையைத்
தொங்கவிட்டது வரலாறு.

விளையாட
தும்பி பிடித்த கை
இன்று
விடுதலைக்கு தும்பி சுடுவது
வரலாற்றின் நிர்ப்பந்தம்.

பால்வடியும் முகத்தில்
படைத்தனம் குடியேறியது
உன் நெஞ்சில் விரவிய
விடுதலைவேட்கையின்
வெளிப்பாடுதானே.

"இந்த வயதில்
நாட்டுப் பற்றா!"
வியப்புக் குறிகளுக்குச் சொல்
தாயை நேசிக்க
மீசை முளைக்கத் தேவையில்லை.





உன் அன்னை
பாலைப் புட்டியில் அடைக்காமல்
தன் சிவப்பு இரத்தத்தை
வெண்மையாக்கி ஊட்டினாள்

இன்று நீ,
தாய் மண் மீட்க
சாவைக் குப்பியில் அடைத்துச்
சரித்திரம் படைக்கின்றாய்.

அடக்கு முறையாளர்களால்
முதிர்ந்தது
உன் அறிவு மட்டுமல்ல
பிஞ்சுக் கைகளும்தான்.

ஓங்கிய
உன் கைமுட்டிகளால்
உடைபடுவது
பூட்டிய விலங்குகள் மட்டுமல்ல
இனவெறிக் கோட்டையும்தான்.

உன் நெஞ்சக் கனலை
ஆதிக்கச் சருகின் மேல்
வாரி வீசு
துணிந்தால்
எதிரியின் எலும்பெல்லாம் தூசு.

மறைகின்ற சூரியன்
இரத்தம் சிந்துவதால்தான்
மறுநாளும் வாழ்கின்றது;
விடுதலைப் போராளியைப்போல.

https://tamileelamarchive.com/



# ஒரு புலிவீரன் விழுகின்றபோது அவனது துவக்கு எழுகின்றது...

- கவிஞர் இரும்பொறை -

நண்பனே!
நான் வருந்துவதெல்லாம்
மக்களின் விடுதலைக்காக
இந்த மண்ணின் மடியில்
சாகின்ற மகிழ்ச்சியை
இன்னுமொருமுறை பெறமுடியாதே!
என்பதற்காகத்தான்.

என் ஆயுதத்தைப் போல
நானும் சாகாமல் இருந்தால்...

இருப்பினும் நண்பனே!
இறந்த பின்னும்
இந்த மண் என்னை முத்தமிடுகின்ற போதெல்லாம்
ஒரு மரமாக செடியாக முளைத்து
உன் உதவிக்கு வருவேன்.

பகைவன் உணரமாட்டான்
அவனது குண்டுத் துளைப்பால்
கொப்பளிப்பது குருதி மட்டுமல்ல
எமது கொள்கைப் பிடிப்புமென்று.

இனவெறியனுக்குத் தெரியாது
நம் பதுங்கு குழிக்குள்
பாச ஊற்றுச் சுரப்பது.





நம் மயானத்தில்
மனிதம் பாட்டிசைப்பது

நம் சாவீடுகள்
சரித்திரம் படைப்பது.

எனக்குத் தெரியும்
போராளிப் புலிகள்
நண்பனின் உயிரைக்
காப்பாற்ற முடியாத போது
அவனுடைய ஆயுதத்தையும் இலட்சியத்தையும்
காப்பாற்றுவார்கள் என்பது.

வீரன் விழுகின்றபோது
அவனுடைய துவக்கு
எழுந்து நிற்கின்றது
வேறொரு கையின் தழுவலுக்காக,

நண்பனே!
இருளும் என் உயிர்ச் சுடருக்குள்ளே
பதிகின்ற அறிவும், நம்பிக்கையும்
இதுதான்.

விடுதலை இரத்தம்
என்றும் விழலுக்குப் பாய்வதில்லை
வெற்றிக்கு முன்பாக ஓய்வதுமில்லை,
போராளியும், வாழையும்
தன் பரம்பரையை
விதைக்காமல் விழுவதில்லை
நானும் தான்.

https://tamileelamarchive.com/



## அண்ணாக்களுக்கு ஒரு அறைகூவல் !

உனது
சின்னத் தங்கை சிரித்த முகத்துடன்
துள்ளித் திரிந்தபின் பள்ளிக்கு போனதும்
பாதி வழியினில் பாசறை சேர்ந்ததும்
பயிற்சி முடிந்த பின் எதிரி வாசலில்
காவலில் நின்று கடமை செய்வதும்
அம்மா சென்று அன்று அழைப்பு விடுத்ததும்
சிரித்துக் கொண்டவள் மறுப்புச் சொன்னதும்
மொத்தமாகவே தெரிந்த பின்பும்
மெத்தனமாகத் திரியும் அண்ணா!
வெட்கம் உனக்கு துளியும் இல்லையா?
வேளா வேளைக்கு சோறும் வேறா?
மீசை மட்டும் முளைத்த உனக்கு
ரோசம்.......ஏனோ?
கலட்டி மண்ணை நேசிக்காத உனக்கு
கனடா மீது காதலாமே?
கனடா போகும் பயணம் மறந்து
களத்தில் இறங்கு கடமை உணர்ந்து
நாளை பிறக்கும் ஈழம் அதனில்
நிறைய உண்டு உனக்கும் பங்கு.

(சுதந்திரப் பறவைகள்)





## நான் தொலைத்த சூரியனைத் தேடுகின்றேன்....

ஆயிரம் கூட்டமாய் வண்ண
மலர்ச் சரங்களாய் மிதந்திட்ட
வண்ணத்துப் பூச்சிகளை
வயல் வெளியில் விரட்டிச் சென்றதும்,

அழகிய எம் கடற்கரையில்
குழிவிட்டு வெளி வந்த நண்டுகளை
துரத்திப் பிடிக்கையில்
கால் தடுக்கி அலையில் விழுந்ததும்,

சின்னஞ் சிறு குருவிகளின்
பொட்டிட்ட முட்டைகளை
பார்த்திட்டுப் பக்குவமாய்
கூட்டினுள் வைத்தும்,

குழை வெட்டிய கிளைகளில்
சூரிய நிறம் பூசி
குந்தியிருக்கும் தும்பிகளை
மயிர்த் தடத்தால் பிடித்ததும்,

சுவரோரச் சிறுமணல் குழிகளில்
சின்னக்கை விரல்களால்
குழுமாட்டுக் குஞ்சுகளைத் தேடி
துளாவிப் பார்த்ததும்,
குயிலாய்க் கத்தும் மாமரங்களை

https://tamileelamarchive.com/



அணில் ஏறி விளையாடும்
முள்முருக்க மரங்களை
கவணோடு தேடி அலைந்ததும்,

நடுங்கும் காலைப் பொழுதில்
இள வெயிலுக் கொழித்திட்ட
வெண்பனி நுரைகளை
இலைகளின் கீழ் தேடியதும்,

கொட்டும் மழையில்
வேணுமென்று நனைந்ததும்
வெயிலோடு மழைபெய்ய
குதூகலித்து துள்ளியதும்,

நிறக் கோடுகள் கீறிய
ஆயிரங்கால் அட்டைகளை
சுமை ஏற்றித் தள்ளாடும்
நத்தைகளை சுருள வைத்து மகிழ்ந்ததும்,

பருவ உணர்வின் வேகத்தில்
தெருவோரக் கடைகளில்
ஒருகணப் பார்வைக்காய்
பல மணி நேரம் மினக்கட்டதும்,

ஒளிமின்னும் வெள்ளிப் பனித்துளிகள்
துளிர்த்திருக்கும் பச்சைப் புல்லினிடை
சிந்திய ரத்தத் துளிகளாய் கிடக்கின்ற
தம்பளப் பூச்சிகளை தடவிப் பார்த்ததும்,

நினைவில் மட்டும் நிலைத்திருக்க





எம்மண்ணைப் பிரிந்து
அந்நியம் ஆனபோது
வாழ்க்கையைத் தொலைத்து விட்டேன்.

பனைமரக் கறுப்பினூடு
எம் மண்ணில் எழுகின்ற
எனது சூரியனைத் தேடுகின்றேன்
ஏழு வண்ணங்களுக்காக ஏங்குகின்றேன்

- திலகர் -

https://tamileelamarchive.com/



# நெஞ்சை நிமிர்த்து !
# நிலவுக்குக் கைநீட்டு !

- புதுவை இரத்துனதுரை -

ஆதிச்சிவனாரே
அம்மனுக்கு பங்களித்து
பாதிச் சிவனாகி பாகம் பிரித்த பின்பும்
நீதி வரவில்லை.

நெடுமுச்சை காற்றிலிட்டு
பாதி உலகம்
படுக்கையறை இயந்திரமாய்
பூச்சூடி
பொட்டிட்டு
புன்னகையை முகத்தேற்றி
பேச்சின்றிக் கிடக்கின்றது.

கத்தரிக்காய் பொரிப்பதற்காக கையுனக்கு?
நீர்க்குடங்கள்
இட்டுச் சுமப்பதற்கா இடையுனக்கு?
பிள்ளையது
தொத்திக்கிடப்பதற்கு மட்டுமா தோளுனக்கு?
இல்லையம்மா....

காதலெனச் சொல்லி கடிதமெனக் கவியெழுதி
போதை வரச்செய்து பூச்சூடி வைத்துவிட்டால்
பெண்ணே அதிலுனக்கு பெரிதான மகிழ்ச்சியென்ன?





தூளிடித்து
மாவிடித்து
தூடை மீன் குழம்பு வைத்து
பாழிருட்டில் தூங்கும் பழக்கமதை கைவிட்டு
சிங்கவேட்டைக்கு சிலிர்தெழும்பி வந்துவிடு!

தும்பி பிடிப்பதற்கே
துணிவில்லாப் பெண்களென
எள்ளி நகைப்பவரை
இடித்துப் புறந்தள்ளு!

சீதனத்தை வாங்கி
சிறைகொள்ளும் ஆணினத்தை
காதணியால் வீசிக் கைவிலங்கு போடஎழு;

பெண்ணென்றால்
ஏதோ போதையென எண்ணுகின்ற
மண்ணினவைத்தூக்கி மறியலிலே போட்டிட வா!

துள்ளி எழும்பு,
தூரியனைக் கொண்டே வா,
நெஞ்சை நிமிர்த்து,
நிலவுக்குக் கைநீட்டு!

ஆண்களுடன் பெண்களுமே
அனைத்திலுமே சமதையென
நீண்டு கிடக்கின்ற நிலமதிலே... நிமிருங்கள்.

உன்னால் முடியும்
உலகத்தைப் புரட்டிவிட
உன்னால் முடியுமம்மா.

https://tamileelamarchive.com/



# எழுதாத கவிதை

எழுதுங்களேன்,
நான்
எழுதாது செல்லும்,
என்
கவிதையை எழுதுங்களேன்!
ஏராளம்...
ஏராளம்.... எண்ணங்களை
எழுத
எழுந்துவர
முடியவில்லை!
எல்லையில்
என் துப்பாக்கி
எழுந்து நிற்பதால்
எழுந்து வர
என்னால்
முடியவில்லை
எனவே
எழுதாத - என்
கவிதையை எழுதுங்களேன்!
சீறும்
துப்பாக்கியின் பின்னால்
என் உடல்
சின்னாபின்னமாக்கப்பட்டு
போகலாம்!
ஆனால்
என் உணர்வுகள்
சிதையாது





உங்களை
சிந்திக்க வைக்கும்!
அப்போது
எழுதாத
என் கவிதையை
எழுதுங்களேன்!
மீட்கப்பட்ட - எம்
மண்ணில்
எங்கள்
கல்லறைகள்
கட்டப்பட்டால்;
அவை
உங்களின் கண்ணீர்
அஞ்சலிக்காகவோ
அன்றேல்
மலர்வளைய
மரியாதைக்காகவோ அல்ல
எம்மண்ணில்
மறுவாழ்விற்கு
உங்கள் மனஉறுதி
மகுடஞ் சூடவேண்டும்
என்பதற்காகவே!
அர்த்தமுள்ள
என் மரணத்தின் பின்
அங்கீகரிக்கப்பட்ட
தமிழீழத்தில்
நிச்சயம் நீங்கள்
உலாவருவீர்கள்!
அப்போ
எழுதாத

https://tamileelamarchive.com/



என் கவிதை
உங்கள் முன்
எழுந்து நிற்கும்!
என்னைத்
தெரிந்தவர்கள்,
புரிந்தவர்கள்,
அரவணைத்தவர்கள்,
அன்பு காட்டியவர்கள்
அத்தனை பேரும்
எழுதாத
எழுந்து நிற்கும்
என் கவிதைக்குள்
பாருங்கள்!
அங்கே...
நான் மட்டுமல்ல
என்னுடன்
அத்தனை
மாவீரர்களும்
சந்தோசமாய்
உங்களைப் பார்த்து
புன்னகை பூப்போம்!

ஆனையிறவு மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட
வானதி (பத்மஜோதி சண்முகநாதபிள்ளை) இறுதியாக எழுதிய கவிதை இது.